வரி விதிப்பு விதி 100-ன்கீழ் ஒழுங்கான முறையில் 1973 ஆம் ஆண்டுவரை வரி வசூல் செய்யப்பட்டது; அந்த விதி 100 இப போது கடைபிடிக்கப்படவில்லை. அதனால் பல்வேறு கோளாறுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு வரி விதிக்கின்ற அசெஸர் பல் வேறு காரணங்களால் குழப்பத்திற்கு ஆளாகியிருக்கிறார். எந்த அடிப்படையில் நாங்கள் வரி விதிப்பது என்று எங்களையே கேட்கிறார்கள். ஆகவே, அந்த விதி 100 சரியாகக் கடைப்பிடிக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற பல புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறன. இந்த புகார் களின் அடிப்படையிலேதான் இதுபற்றி எந்தவிதமான முடிவை எடுப்பது: எந்த அடிப்படையிலே வரி விதிப்பு இருக்க வேண்டும்; எந்த வகையிலே நிர்ணயம் செய்தால் குழப்பம் இல்லாமல் இருக்கும் என்பதை அரசு ஆராய்ந்து வருகிறது. வெகுவிரைவில் அதுபற்றிய குறிப்புகள் வெளிவரும். அதுவரை இப்படிச் சொல் லப்படும் புகார்களுக்கு நிச்சயமாக உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: அதுவரை இப்போது உயர்த்தப் பட்டிருக்கிற வரியை நிறுத்தி வைத்து, முன்னால் இருந்த வரியை வசூல் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுபற்றி தெளிவான முடிவு எடுக்கும் வரையில் புகார்களைக் குறிப்பிட்டு கொடுத்தால் அதன்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் எஸ். இராமச்சந்திரா புரத்தில் உள்ள இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற் பத்திமற்றும் விற்பனைசங்கம் மூடப்பட்டுள்ளதும் தொழிலாளர்கள் வேலையில்லாது இருக்கும் நிலைகுறித்தும்

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியில் எஸ். இராமசந்திராபுரத்தில் உள்ள க்யூ. 104 இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச்சங்கம் மூடப்பட்டுள்ளதால் அங்கு வேலை செய்யும் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கும் நிலைகுறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சரவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

திருவில்லிபுத்தூர் தொகுதியில், எஸ். இராமச்சந்திராபுரத்தில் உள்ள இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் மூடப் பட்டுள்ளதும், தொழிலாளர்கள் வேலை இல்லாது இருக்கும் நிலை குறித்தும்

1978 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள க்யூ. 104, இராமச்சந்திராபுரம் கூட்டுறவு நெசவாளர் உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் 407 அங்கத்தினர்களைக் கொண்டு துவக்கப்பட்டு தற்போது அது 158 தறிகளுடன் இயங்கி வருகிறது. இச்சங்கம் இயங்காமல் மூடிக் கிடக்கிறது என்பது உண்மையல்ல. 1976-77-ம் ஆண்டின் இச்சங்கம் ரூ.7·84 இலட்சம் மதிப்புள்ள கைத்தறி துணிகளை உற்பத்தி செய்து ரூ 8·27 இலட்சம் மதிப்புள்ள கைத்தறிதுணிகளை விற்பனை செய்துள்ளது. இச்சங்கத்திற்கு இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு வங்கி ரூ·3·27 இலட்சம் அளவுக்கு 1977-78-ம் ஆண்டுக்கு காசுக்கடன் வசதி அளித்துள்ளது. 2/40 மற்றும் 26ம் நெம்பர் ஜனதா ரக வேஷ்டிகள் ஏற்றுமதி ரக சர்ட்டிங் போன்ற துணிகளை இச்சங்கம் உற்பத்தி செய்து வருகிறது. 31-3-78-ல் இச்சங்கத்தில் ரூ.1·33 இலட்சம் மதிப்புள்ள துணிகள் சரக்கு இருப்பாக உள்ளது. தற்பொழுது நடைபெற்று வரும் 24-வது அகில இந்திய கைத்தறி இருவார விழாவினையொட்டி நடத்தப்பெறும் கைத்தறி கண்காட்சிகளினால் இச்சங்கத்தின் சரக்குகள் கணிசமான அளவுக்கு விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே திருவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள எஸ். இராமச்சந்திராபுரத்தில் உள்ள க்யூ 104, இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை நம்பி 100 குடும்பங்கள் பிழைக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களை துவக்கும் போது பல்வேறு உதவிகளை அரசு செய்கிறது. உதவி செய்வது மட்டும் போதாது. தொடர்ந்து பராமரிப்பும் செய்யவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் வியாபாரம் நெருக்கடி ஏற்படுவதால் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கமுடியாமல் கூட்டுறவு சங்கத்தைப் பாதிக்கிற நிலைமை ஏற்படுகிறது. எனவே அந்த நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்காக மத்திய கூட்டுறவு வங்கி, இதற்காக ஒரு நிதி ஒதுக்கிட அரசு அனுமதிக்க வேண்டும்,

மாவட்ட மத்திய வங்கியில் இருந்து கூட்டுறவு வங்கிக்கு கடன் வழங்கும்போது அதிக வட்டி வசூல் செய்கின்றனர். ஆதலால் மாநில வங்கியில் இருந்து நேரிடையாக ரூபாய் வழங்க வேண்டும்,

இந்தக் கூட்டுறவுச் சங்கம் 4 வருடம் சிறப்பாக நடந்தால் இந்த நட்டத்தை ஈடு கொடுக்க முடியும்.

ஆதலால், அரசு எந்த நிதியிலாவது 1 லட்சம் கடன் கொடுத்து நூற்றுக்கணக்கான குடும்பத்துக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். வரவு செலவு நடக்கவில்லை ஆதலால் தெரியப்படுத்தி. . . .

திருவில்லிபுத்தூர் தொகுதியில், எஸ். இராமச்சந்திராபுரத்தில். உள்ள இராமச்சந்திராபுரம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் மூடப் பட்டுள்ளதும், தொழிலாளர்கள் வேலை இல்லாது இருக்கும் நிலை குறித்தும்

[1978 ஏப்ரல் 6

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இராமச்சந்திராபுரம் கூட்டுறவு நெசவாளர் சங்கத்தில் ஒரு இலட்ச ரூபாய் மதிப்புள்ள துணிகள்தான் இப்போது கையிருப்பிலே இருக்கின்றன. இது அவர்களுடைய உற்பத்தியிலேயே கணிசமான அளவுக்குக் குறைந்த அளவுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல் மத்திய வங்கியின் மூலமாகவும் இப்போது நாம் பல்வேறு வகையிலே உதவி செய்து வருகிறோம். புதிதாக தமிழக அரசு மத்திய வங்கியின் மூலம் சான்றிதழ் கடன் ஒன்றை வழங்கலாம் என்று இப்பொழுது ஆங்காங்கே உள்ள மத்திய வங்கிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இவர்களிடம் தேங்கி இருக்கின்ற துணிகள் மீதும் அல்லது கோ-ஆப்-டெக்ஸ்-க்கு வழங்கி இருப்பார்களேயானால் அங்கேயிருந்து வரவேண்டிய நிலுவைத்தொகையின் மீதும் சான்றிதழ் கடன் பெற்று மேலும் இவர்கள் தங்களுடைய தொழிலை நடத்தலாம் என்று இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது. எனவே, சங்கங்கள் தொடர்ந்து நடைபெறுவதில் எந்தவிதமான சிக்கலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் குறிப்பிடப்பட்ட இந்தச் சங்கம் மூடப்படவில்லை என்பதை அறிக்கையிலேயே தெரிவித்திருக்கிறேன். ஆகவே தொடர்ந்து அது மூடப்பட்டிருக்கிறது என்ற தகவலை இங்கே தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

(இ) நீதிபதி இஸ்மாயில் விசாரணைக்கமிஷன் அறிக்கை மீதான விவாதம்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ''பேரவையின் 1-3-1978 ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற சென்னை மத்திய சிறைச்சாலையில் 1976 பிப்ரவரி முதல் 1977 பிப்ரவரி வரையிலான கால அளவில் அரசியல் கைதிகளைக் கொடுமைப் படுத்தியதாகவும், அடித்ததாகவும் கூறப்பெறும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பெற்ற விசாரணைக் கமிஷனின் அறிக்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''
என்று வேண்டுகிறேன்.